(எட்டாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

இல. 1(3).] **பாராளுமன்றம்**

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2020 பெப்ரவரி 07 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

# 2020 பெப்ரவரி 18, செவ்வாய்க்கிழமை

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

துறைமுக, விமானநிலைய அபிவிருத்தி அறவீடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*

மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சர்,— தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— 2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் 3(ஓ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 142 ஆம் பிரிவின் கீழ் மருத்துவகப் பரீட்சிப்புகள் தொடர்பில் சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 ஒக்டோபர் 14 ஆம் திகதிய 2145/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2020.02.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் சுகாதாரம் மற்றும் சுதேச வைத்திய சேவைகள் அமைச்சர்,— தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 2015 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்தின் 118 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 142 ஆம் பிரிவின் கீழ் விலையிடல் தொடர்பில் சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 ஒக்டோபர் 21 ஆம் திகதிய 2146/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2020.02.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

கைத்தொழில் ஏற்றுமதி மற்றும் முதலீட்டு மேம்பாடு அமைச்சர் மற்றும் சுற்றுலா மற்றும் விமானச் சேவைகள் அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 (2) ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி தொடர்பில் அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 ஒக்டோபர் 02 ஆம் திகதிய 2143/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2020.02.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## 2020 மார்ச் 03, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2/2020

கௌரவ புத்திக பத்திரண,— விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) காலி சர்வதேச கிறிக்கெட் மைதானத்தின் விளையாட்டரங்கு பழுதடைந்த நிலையில் உள்ளதென்பதையும்;

(ii) உரிய பராமரிப்பு இல்லாமையினால் எதிர்காலத்தில் சர்வதேச போட்டிகளை நடத்த முடியாத நிலை ஏற்படலாம் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) காலி சர்வதேச கிறிக்கெற் மைதானத்தில் 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட சர்வதேச கிறிக்கெற் போட்டிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி போட்டிகளின் மூலமாக கிடைத்த வருமானம் எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி வருடங்களில் மைதானத்தின் பணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை ஒவ்வொரு வருட ரீதியாக தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி மைதானத்தின் அபிவிருத்தி பணிகளுக்காக அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

45/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பதுளை — பண்டாரவளை வீதியில் 2 ஆம் மைல் கல்லின் அருகாமையிலுள்ள பாலம் கடுமையாக சிதைவுற்றுள்ளதை அறிவாரா;

(ii) இப்பாலத்தினூடாக செல்லவேண்டியுள்ள கிராமங்களின் பெயர்கள் யாவை;

(iii) இப்பாலத்தின் பழமை பாதுகாக்கப்படக் கூடியவாறு நவீனமயப்படுத்துவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

72/2020

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சரும் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இரத்தினபுரி மாவட்டத்தில் காணப்படுகின்ற தொழிலின்மை விகிதமானது ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தின் பிரகாரம் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

(ii) குறிப்பிட்ட தொழிலின்மை பிரச்சினைக்காக வழங்கப்படும் தீர்வுகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி தீர்வுகளின் மூலம் அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் இலக்குகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி இலக்குகளை அடைந்து கொள்வதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

119/2020

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ,— உயர் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டில் க.பொ.த. (உயர் தர) பரீட்சைக்கு உயிரியல் பாடத் துறையில் புத்தளம் மற்றும் குருணாகல் மாவட்டங்களிலிருந்து தோற்றியுள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி எண்ணிக்கையில், பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமையை பெற்றுள்ள மாணவர்களின் எண்ணிக்கையும் சதவீதமும் எவ்வளவென்பதையும்;

(iii) மருத்துவ பீடத்திற்கான தகைமையை பெற்றுள்ள மாணவர்களின் எண்ணிக்கையும் சதவீதமும் எவ்வளவென்பதையும்;

(iv) மருத்துவ பீடத்திற்கான தகைமையை பெற்றுள்ள மாணவன் அல்லது மாணவியின் ஆகக்குறைந்த பெறுபேறு, Z பெறுமதி, கல்வி கற்ற பாடசாலை மற்றும் தெரிவுசெய்யப்பட்ட மருத்துவ பீடம் யாதென்பதையும்;

ஒவ்வொரு மாவட்டத்தின்படி தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

139/2020

கௌரவ பிமல் ரத்னாயக்க,— மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் மற்றும் உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை அமைச்சர் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 வறட்சி நிவாரணம் II ஆம் கட்டத்தின் கீழ் நிவாரணம் வழங்கப்பட்டுள்ள மாவட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) அதற்காக தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகப் பிரிவு மற்றும் அதற்காகச் செலவிடப்பட்ட மொத்தத் தொகை என்பன ஒவ்வொரு மாவட்டத்தின் பிரகாரம் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) அதன் பொருட்டு விநியோகிக்கப்பட்ட சுற்றறிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) அவற்றுக்கு மத்தியில் இறுதியாக நடைமுறைப்படுத்தப்பட்ட செல்லுபடியான சுற்றறிக்கை யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) செல்லுபடியான சுற்றறிக்கையின் பிரகாரம் குருநாகல் மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பயனுகரிளின் எண்ணிக்கை மற்றும் அதற்காகச் செலவிடப்பட்ட மொத்த தொகை ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவின் பிரகாரம் யாதென்பதையும்;

(ii) இரத்துச் செய்யப்படும் சந்தர்ப்பத்தில் NDRC/2018/03 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் குருநாகல் மாவட்டத்தில் இனங்காணப்பட்டிருந்த பயனுகரிகளின் எண்ணிக்கை ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவின் பிரகாரம் தனித்தனியாக முன்வைக்கப்படுமா என்பதையும்;

(iii) குருநாகல் மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவுகள் யாவை என்பதையும்;

(iv) அதில் பொல்பித்திகம உள்ளடங்கவில்லையெனில் அதற்கான காரணம் யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

149/2020

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் இலங்கை மத்திய வங்கியின் கீழ் பதிவுசெய்துள்ள நிதிக் கம்பெனிகளின் எண்ணிக்கை யாது;

(ii) அவற்றின் பெயர்கள் மற்றும் பணிப்பாளர் சபை யாது;

(iii) நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்த நாள் முதல் நிதி நெருக்கடிகளுக்கு இலக்காகிய நிதிக் கம்பெனிகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை;

(iv) அவ்வொவ்வொரு நிதிக் கம்பெனியிலும் வைப்புகளை பேணிவந்துள்ள வைப்பாளர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது ;

(v) அந்நிதிக் கம்பெனிகளின் வைப்பாளர்களுக்கு நீதியை நிலைநாட்ட இற்றைவரை மேற்கொண்ட மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற வழிமுறைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5/2020

கௌரவ புத்திக பத்திறண,— மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் மற்றும் உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை அமைச்சர் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கண்டி நகர சபை ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள வெலிகந்த கிராமம் மண் சரிவுக்கு உள்ளாகும் பாரிய அச்சுறுத்தலைக் கொண்ட ஒரு பிரதேசமாக தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பினால் பெயரிடப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) வெலிகந்த கிராமவாசிகளுக்கு கண்டி, ஹந்தானை, கலஹ தோட்டத்தில் காணிகளும் வீடுகளை நிர்மாணித்துக்கொள்வதற்கான கடனும் வழங்கப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) இப்பிதேசத்தில் பாரிய இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு பழைய படிக்கட்டுகளுக்குப் பதிலாக வீதியொன்று வெட்டப்படுகின்றதென்பதையும்;

(iv) மேற்படி மண் வெட்டுவதற்காக உரிய அனுமதி பெறப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இவ்வீதி வெட்டப்படுவதை நிறுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அது எவ்வகையில் என்பதையும்;

(iii) இச்சட்ட விரோத செயற்பாடுகளுடன் சம்பந்தப்பட்ட ஆட்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில் அது எவ்வகையில் என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

48/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பதுளை மாவட்டத்திலுள்ள பிரிவெனாக்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பிரிவெனாக்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பிரவெனாவிலும் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) பதுளை மாவட்டத்தில் பிரிவெனாக் கல்வியை மேம்படுத்துவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

76/2020

கௌரவ ஹேஷா விதானகே,— மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மேட்டுக் காணிகளில்லாத ஆட்களுக்கு தமது வயல் காணியில் 10 பர்சஸ் அளவை நிரப்பி வீடொன்றை அமைத்துக்கொள்ள அனுமதி வழங்குதல் நீண்ட காலமாக நடைமுறையிலிருந்தென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) தற்போது மேட்டுக் காணிகளில்லாத ஆட்களுக்கு தமது வயல் காணியில் 10 பர்சஸ் அளவை நிரப்பி வீடொன்றை அமைத்துக்கொள்ள வழங்கப்பட்டிருந்த வாய்ப்பு இழக்கச் செய்யப்பட்டுள்ளதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) ஆகையால் நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் காணியில்லாத பெரும் தொகையான மக்கள் நிர்க்கதி நிலைமைக்கு உள்ளாகியுள்ளனரென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வயல் காணியில் 10 பர்சஸ் அளவை நிரப்புவதற்காக இன்றளவில் கமநல சேவைகள் திணைக்களத்திற்கு விண்ணப்பித்துள்ள ஆட்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஆட்களுக்கு மிகத் துரிதமாக மேற்படி10 பர்சஸ் வயல் காணியை நிரப்பிக்கொள்ள வாய்ப்பளிப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில், அது எத்திகதியிலிருந்து என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

140/2020

கௌரவ பிமல் ரத்நாயக்க,— மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் மற்றும் உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை அமைச்சர் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018 வறட்சி நிவாரணம் கட்டம் I இன் கீழ் பொல்பித்திகம பிரதேச செயலகப் பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) அதற்கென செலவு செய்யப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) இதன் II ஆம் கட்டத்தின் போது பொல்பித்திகம பிரதேச செயலகப் பிரிவில் எந்தவொரு பயனாளியும் தெரிவு செய்யப்படவில்லையென்பதனை அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அது ஏன் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பிரதேச செயலாளர் NDRSC/2018/03 என்ற இலக்கமுடைய இரத்துச் செய்யப்பட்ட சுற்றுநிருபத்தினையே கையாண்டுள்ளார் என்பதனை ஏற்றுக்கொள்வாரா;

(ii) செல்லுபடியாகும் NDRSC/2018/03ii என்ற இலக்கமுடைய சுற்றுநிருபத்தினை நடைமுறைப்படுத்தாதது ஏன்;

(iii) 2018.10.22 ஆம் திகதி பிரதேச செயலாளரால் பயனாளிகள் எவரும் இல்லையென உரிய அமைச்சின் செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவித்திருப்பது இரத்துச் செய்யப்பட்ட சுற்றுநிருபத்தின் 4 ஆம் பந்தியில் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கு அமைவாகவா;

(iv) இரத்துச் செய்யப்பட்ட சுற்றுநிருபத்தின் 4ஆம் பந்தி மீறப்பட்டுள்ளமையை ஏற்றுக்கொள்வாரா;

என்பதனையும் அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

150/2020

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— தகவல் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்டபதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் பெற்ற வருமானம் மற்றும் செய்த செலவு ஆண்டுவாரியாக தனித்தனியாக யாது;

(ii) அக்காலப்பகுதிக்குள் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள், கல்வித் தகைமைகள் மற்றும் பதவிப்பெயர்கள் யாவை;

(iii) இவ்விதமாக ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்ய கடைப்பிடித்த முறையியல் யாது;

(iv) தேசிய ரூபவாஹினியில் சுதந்திர ஊடகக் கலைக்கான கதவுகளை திறந்துவிட மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

157/2020

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொணறாகல புதிய மாவட்டச் செயலகத்திற்கு முன்னால் அமைந்துள்ள மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபையினால் இருப்பாட்சி செய்யப்படுகின்ற காணியை அதன் ஊழியர்களுக்கிடையில் பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) எனினும் அக்காணிகளின் உரித்தாண்மையானது காணி மறுசீரமைப்பு சபைக்கு உரித்தானதென்பதையும்;

(iii) காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் அக்காணிகளுக்கான உறுதிகளை வழங்க வேண்டாமென மாவட்டக் காணிப் பதிவாளரிடம் எழுத்தில் அறிவிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(iv) இது சம்பந்தமாக மொணறாகல மாவட்ட இணைப்புக் குழுவில் ஆட்சேபனை தெரிவிப்பட்டிருந்தபோதிலும் இந்த காணி வழங்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்குச் சொந்தமான இக்காணி குத்தகை அடிப்படையில் மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபைக்கு வழங்கப்பட்டுள்ள நிலையில் உறுதிகளை வழங்க மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்திச் சபைக்கு அதிகாரம் உள்ளதா;

(ii) இந்த நிலைமையின் கீழ் சட்டபூர்வமற்ற முறையில் செய்யப்பட்டுள்ள இந்த காணிப் பகிர்வினை தடைசெய்ய நடவடிக்கை எடுப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2020 மார்ச் 04, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

6/2020

கௌரவ புத்திக பத்திறண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சமூக ஏற்றத்தாழ்வு மற்றும் வளங்கள் நியாயமான முறையில் பிரிந்து செல்லாமை காரணமாக இலங்கையிலிருந்து வறுமையை இல்லாதொழிப்பது கடினமாக அமைந்துள்ளதென்பதையும்;

(ii) தற்போது நடைமுறையிலுள்ள பாடத்துறைசார் கல்வி முறையின் மூலம் திறன்கள் விருத்தியடையாததன் காரணமாக சமகால சமூகத்திற்குப் பொருத்தமான தொழில்வாண்மையாளர்கள் உருவாகுவதில்லையெனவும்;

(iii) சட்டப் பொறிமுறையிலும் நீதி நிருவாகத்திற்கான நடவடிக்கைகள் துரிதமாகவும் முறையாகவும் இடம்பெறுவதில்லை என்பதையும்;

(iv) மேற்படி அனைத்து விடயங்களும் இளைஞர் சமுதாயத்தின் மீது நேரடியான தாக்கத்தினை ஏற்படுத்துகின்றதென்பதையும்;

(v) இளைஞர்கள் சமூகவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவதில் மேற்படி விரக்தி மனநிலை தாக்கம் ஏற்படுத்துகின்றதென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) பாடசாலைக் கல்வியை இடையில் நிறுத்துகின்ற இளைஞர் சமுதாயத்தை தொழிற்பயிற்சி அல்லது வேறு முறையான வாழ்வாதார வழிகளில் ஆற்றுப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவையென்தையும்;

(iii) பாடசாலைக் கல்வியினை தொழிற்சந்தைக்கு ஏற்றவகையில் திருத்துவதற்குப் பிரேரணைகள் முன்வைக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில் அப்பிரேரணைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

63/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் மற்றும் உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை அமைச்சர் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சரியான வானிலை எதிர்வுகூறல்களை வெளியிடுவதற்காக வளிமண்டலவியல் திணைக்களத்தினால் தாபிக்கப்பட்டுள்ள ரேடார் முறைமைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ரேடார் முறைமைகள் தாபிக்கப்பட்டுள்ள இடங்கள் யாவையென்பதையும்;

(iii) தற்போது மேற்படி ரேடார் முறைமைகளில் செயலிழந்துள்ள ரேடார் முறைமைகள் யாவையென்பதையும்;

(iv) அவ்வாறு செயலிழந்துள்ள ரேடார் முறைமைகளைத் திருத்த அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

89/2020

கௌரவ ஹேஷா விதானகே,— விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் பதவிகளுக்காக ஆட்களை நியமிக்கும் முறையியல் யாதென்பதையும்;

(ii) ஒவ்வொரு பதவிகளுக்காக தேவைப்படும் தகைமைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்கான தேர்தலின்போது பாரியளவில் இலஞ்சம் வழங்கும் செயற்பாடு இடம்பெறுகின்றது என்பதனை ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(iv) ஆமெனில் மேற்படி தேர்தலை வெளிப்படைத்தன்மையுடன் நடாத்துவதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

141/2020

கௌரவ பிமல் ரத்நாயக்க,— மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் மற்றும் உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை அமைச்சர் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வறட்சி நிவாரணம் வழங்கும் பொருட்டு வெளியிடப்பட்ட NDRSC/2018/03 சுற்றுநிருபத்தின் 04 ஆம் பந்தியின் படி பொல்பித்திகம பிரதேச செயலகப் பிரிவின் அனைத்து கிராம அலுவலர் பிரிவுகளிலும் கள உத்தியோகத்தர்கள் மூவரைக் கொண்ட குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், கூட்டப்பட்ட கூட்டங்களின் எண்ணிக்கை, திகதிகள், நேரங்கள், இடங்கள், சமுகமளிப்பு, நிகழ்ச்சி நிரல்கள் மற்றும் கலந்துரையாடல் குறிப்புக்கள் என்பவற்றை சமர்ப்பிப்பார;

(iii) எந்தவொரு பயனாளியும் இல்லையென குழு ஏகமனதாக பரிந்துரை செய்துள்ளதா;

(iv) அந்த பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பாரா;

என்பதனை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இதற்கமைவாக பிரதேச செயலாளரின் தலைமையில் உரிய அதிகாரிகளைக் கொண்ட குழு ஒன்று கூடியுள்ளதா;

(ii) ஆமெனில், அக்கூட்டங்கள் தொடர்பான விரிவான அறிக்கையொன்றினைச் சமர்ப்பிப்பாரா;

(iii) எந்தவொரு பயனாளியும் இல்லையென குழு ஏகமனதாக பரிந்துரை செய்துள்ளதா;

(iv) அந்த பரிந்துரைகளை சபையில் சமர்ப்பிப்பாரா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) 2018 வறட்சி நிவாரணம் கட்டம் II ஐ நடைமுறைப்படுத்துகின்ற போது பொல்பித்திகம மக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதனை ஏற்றுக்கொள்வாரா;

(ii) அதனைச் சரி செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாது;

(iii) உரிய நிவாரணங்கள் மக்களுக்கு வழங்கப்படுமா;

(iv) குற்றவாளிகளுக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாது;

என்பதனை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

151/2020

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— தகவல் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பு வருடந்தோறும் ஈட்டிய வருமானம் மற்றும் செலவிட்ட பணத்தொகை ஒவ்வொரு வருடத்திற்கிணங்கவும் தனித்தனியாக எவ்வளவு;

(ii) அக்காலப்பகுதிக்குள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள், முகவரிகள், கல்வித் தகைமைகள் மற்றும் பதவிப் பெயர்கள் யாவை;

(iii) மேற்படி காலப்பகுதிக்குள் சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பில் சுதந்திரமான ஊடக கலையை உருவாக்குவதற்காக மேற்கொண்ட வழிமுறைகள் யாவை;

(iv) சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பில் குற்றச்சாட்டுகளுக்கு இலக்கானவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளை குறிப்பிடுவாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

9/2020

கௌரவ புத்திக பத்திறண,— உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) "வரையறுக்கப்பட்ட இலங்கை தொழில்முயற்சி அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்" பதிவு செய்யப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி சங்கத்தின் உத்தியோகத்தர் குழாத்தின் பதவிகளும் அப் பதவிகளை வகிக்கும் ஆட்களின் பெயர்களும் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இச் சங்கத்தை பதிவு செய்தல் தொடர்பான நடவடிக்கை சட்டரீதியற்றதென்பதையும்;

(ii) கூட்டுறவுச் சங்கமொன்றை பதிவு செய்கையில் கவனத்தில் கொள்ள வேண்டிய எவ்வித காரணிகள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்படவில்லை என்பதையும்;

(iii) இது தொடர்பாக முறையான சங்கப் பதிவு கோப்பொன்று திணைக்களத்தில் இல்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) (i) இது தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அத் திகதி யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

64/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் மற்றும் உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை அமைச்சர் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வளிமண்டலவியல் திணைக்களத்தில் தற்போது கடமையில் ஈடுபட்டுள்ள மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஊழியர்களின் பெயர்கள், முகவரிகள், கல்வித் தகைமைகள் மற்றும் அவர்கள் தற்போது வகிக்கின்ற பதவிகள் யாவையென்பதையும்;

(iii) வளிமண்டலவியல் திணைக்களத்தில் தற்போது ஊழியர் வெற்றிடம் மற்றும் வேறு குறைபாடுகள் நிலவுவதாயின், அக்குறைபாடுகளை நிவர்த்தி செய்ய அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

90/2020

கௌரவ ஹேஷா விதானகே,— விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை கிரிக்கட் நிறுவனத்தின் தற்போதைய உத்தியோகத்தர்களின் கட்டமைப்பு யாதென்பதையும்;

(ii) அவர்களுக்குச் செலுத்தப்படுகின்ற சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய சலுகைகள் வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) கடந்த காலப்பகுதியில் சில உத்தியோகத்தர்கள் கிரிக்கெட் விளையாட்டினை மேம்படுத்தவும் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் முன்னேற்றம் தொடர்பிலும் எவ்விதப்பணிகளையும் மேற்கொள்ளாது சலுகைகளை அனுபவித்துக் கொண்டிருப்பதை அறிவாரா;

(iv) இலங்கை கிரிக்கட் நிறுவனத்தில் இடம்பெறுகின்ற சில செயற்பாடுகள் காரணமாக இலங்கையின் கிரிக்கட் விளையாட்டிற்கு மிகவும் சிக்கலான நிலைமையொன்று ஏற்படும் என்பதை ஏற்றுக்கொள்வாரா;

(v) இலங்கை கிரிக்கட் நிறுவனத்தில் இடம் பெறுகின்ற நிதி முறைகேடுகள் போன்ற பொதுவான சம்பவங்களைத் தடுப்பபதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2020 மார்ச் 05, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

22/2020

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பற்கு,— (1)

(அ) (i) 2017 ஆம் ஆண்டில் சட்டவிரோதமாக இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்ட சிறுவர்களுக்கான விளையாட்டுச் சாமான்கள் சுங்கத்தினால் கைப்பற்றப் பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், கைப்பற்றப்பட்ட விளையாட்டுச் சாமான்களின் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி விளையாட்டுச் சாமான்கள் எந்த நாடுகளில் இருந்து கொண்டுவரப்பட்டன என்பதையும்;

(iv) அவ்வாறான சட்டவிரோத நிறுவனங்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அவ்வாறான சட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) விளையாட்டுச் சாமான்கள் தயாரிப்பினை கைத்தொழில் துறையாக இந்நாட்டில் விஸ்தரிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

65/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை புத்தகப் பைகளை வழங்குவதற்கு ஊவா மாகாண சபையினால் விலை மனுக்களை சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்ட நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(ii) அதற்கு விலைகளை சமர்ப்பித்த கம்பனிகளின் பெயர்கள், முகவரிகள் மற்றும் சம்பந்தப்பட்ட விலைகள் யாவையென்பதையும்;

(iii) விலை மனு கோரப்படுவதற்கு முன்னர் தேவையான புத்தகப் பைகளின் விபரக்குறிப்புகள் தயாரிக்கப்பட்டிருப்பின் அது சம்பந்தமான விபரங்கள் யாவையென்பதையும்;

(iv) இது சம்பந்தமாக கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்படுகின்ற விடயங்களின் படி திருத்தங்களை மேற்கொள்வதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

91/2020

கௌரவ ஹேஷா விதானகே,— விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த 10 வருட காலப்பகுதியினுள் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் வருமானம் மற்றும் செலவுகள் ஒவ்வொரு வருடத்தின் அடிப்படையில் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) கடந்த 10 வருட காலப்பகுதியினுள் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் வருமானம் மற்றும் செலவுகள் தொடர்பில் அமைச்சரவையினால் முன்வைக்கப்பட்ட கணக்காய்வு கருத்துக்கள் யாவை என்பதையும்;

(iii) கிரிக்கெட் நிறுவனத்தினுள் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் நிதி மோசடியைத் தவிர்ப்பதற்கு அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

142/2020

கௌரவ பிமல் ரத்நாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010 முதல் 2017 ஆம் ஆண்டு வரை கொழும்பு, காலி, மாத்தறை, கண்டி, குருணாகல், யாழ்ப்பாணம் மற்றும் கம்பஹா மாவட்டங்களின் தேசிய பாடசாலைகளின்,

(i) 5 ஆம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சையின் வெட்டுப்புள்ளி யாதென்பதையும்;

(ii) புலமைப்பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளின் பிரகாரம் 6 ஆம் ஆண்டுக்காக சேர்த்துக்கொள்ளப்பட்ட பிள்ளைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) 5 மற்றும் 6 ஆம் ஆண்டுகளின் சமாந்தர வகுப்புகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) 6 ஆம் ஆண்டுக்கு புலமைப்பரிசில் பெறுபேறுகளின் கீழ் சேர்த்துக் கொள்ளப்படாத ஆரம்பப் பிரிவிலிருந்து வந்துள்ள மாணவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) 6 ஆம் ஆண்டு மொத்த மாணவர்கள் எண்ணிக்கையில் புலமைப்பரிசில் பெறுபேறுகளின் கீழ் சேர்ந்துள்ள மாணவர்களின் வீதம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பார?

(ஆ) இன்றேல், ஏன்?

152/2020

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— தகவல் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் காணப்படுகின்ற ஒலிபரப்புச் சேவைகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) 2015 ஆம் ஆண்டு முதல் அவ்வொவ்வொரு ஒலிபரப்புச் சேவையும் ஈட்டிய வருமானம் மற்றும் பராமரிப்புச் செலவினங்கள் ஒவ்வொரு வருடங்களுக்கமைவாக தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) அக்காலப்பகுதியினுள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை, அவர்களின் பெயர்கள் மற்றும் பதவிகள் யாவையென்பதையும்;

(iv) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் நிகழ்ச்சிகளை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்துவதற்காக இதுவரையில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

23/2020

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சரை கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2017 ஆம் ஆண்டில் இந்நாட்டுக்கு சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட பாடசாலை உபகரணங்கள் இலங்கை சுங்கப் பிரிவினரால் கைப்பற்றப் பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், கைப்பற்றப்பட்டுள்ள பாடசாலை உபகரணங்களின் பெறுமதி யாது என்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட பாடசாலை உபகரணங்கள் எந்நாடுகளிலிருந்து கொண்டுவரப்பட்டவை என்பதையும்;

(iv) அச்சட்ட விரோத நிறுவனங்களுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(v) ஆமெனில், அச்சட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பாடசாலை உபகரண உற்பத்தி, இலங்கையின் கைத்தொழிலொன்றாக இருப்பதனால் இந்நாட்டு உற்பத்தியை பாதுகாக்கும் வகையில் இறக்குமதி கட்டுப்பாட்டினை மேற்கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

66/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊவா மாகாண சபையின் பாடசாலை புத்தகப் பைகளை வழங்கும் கருத்திட்டத்தின் வழங்குனராக இல.100, கந்தன, ஸ்பிறிங்வெலி எனும் முகவரியில் அமைந்துள்ள வீரசிங்க டிஸ்ரிபியூடர்ஸ் கம்பனி தெரிவு செய்யப்பட்டிருந்ததென்பதையும்;

(ii) மேற்படி முகவரியில் எவ்வித வர்த்தக முயற்சியும் இடம்பெறுவதில்லையென கணக்காய்வு விசாரணையில் காட்டப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இக்கம்பனி மின் உபகரணங்களை விநியோகிப்பதற்காக மாத்திரம் யு/ஹா/785 இலக்கமுடைய வர்த்தக கம்பனியாக பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், ஊவா மாகாண சபையினால் பாடசாலை புத்தகப் பைகளை வழங்குவதற்கு அக்கம்பனிக்கு அனுமதி வழங்குவதின் சட்டப் பின்னணி யாதென்பதையும்;

(ii) இதன்போது இடம்பெற்றுள்ள பாரிய மோசடி நடவடிக்கை சம்பந்தமாக அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

93/2020

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சர் மற்றும் நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொடகவெல பிரதேச செயலகப் பிரிவில் பலவின்ன எழுச்சிக் கிராமத்தில் வழங்கப்பட்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) அந்த எழுச்சிக் கிராமம் மக்களிடம் கையளிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) இற்றைவரை மேற்படி வீடுபெறுனர்களுக்கான உறுதிப்பத்திரங்கள் வழங்கப்படவில்லை என்பதனை ஏற்றுக்கொள்வாரா;

(iv) ஆமெனில் மேற்படி உறுதிப்பத்திரங்களை வழங்குவதற்காக மேற்கொள்ளப்படும் துரித நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

143/2020

கௌரவ பிமல் ரத்நாயக்க,— மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் மற்றும் உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை அமைச்சர் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தொண்டர் பொலிஸ் கான்ஸ்டபிளாக சேவையாற்றியவர்கள் 9/1374/360/047 ஆம் இலக்க அமைச்சரவை பத்திரத்தின் படி இலங்கை ஆசிரியர் சேவை 3-II தரத்திற்கு உள்ளீர்க்கப்பட்டதென்பதையும்;

(ii) இவர்கள் ஆசிரியர் பற்றாக்குறை நிலவிய வெலிஓயா போன்ற பின்தங்கிய பிரதேசங்களுக்கு சேவையில் ஈடுபடுத்தப்பட்டார்கள் என்பதையும்;

(iii) இதனால் ஆசிரியர் பற்றாக்குறையினால் மூடப்படவிருந்த அப்பிரதேச பாடசாலைகளை மீள கட்டியெழுப்பக் கூடியதாக இருந்ததென்பதையும்;

(iv) எனினும், இவர்களது எதிர்ப்பை கவனிக்காது அவர்களை மீண்டும் தொண்டர் சேவையில் ஈடுபடுத்துவதற்கான முயற்சிகள் காணப்படுகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இவர்களின் கோரிக்கையின் படி இவர்களை இலங்கை ஆசிரியர் சேவையில் நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனின், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

153/2020

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— சுற்றாடல் மற்றும் வனசீவராசிகள் வளங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கண்டி மாவட்டத்தில் மணல் அகழ்வதற்காக அனுமதி வழங்கப்பட்டுள்ள இடங்கள் யாவை என்பதையும்;

(ii) அவ்விடங்களில் இருந்து மணல் அகழ்வதற்காக வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை, ஒவ்வொரு பிரதேச செயலாளர்பிரிவு அடிப்படையில் தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) அவ்வனுமதிப்பத்திரங்களை வழங்குகையில் கவனத்தில் கொள்ளப்பட்ட சூழல் சட்டத்தின் விதப்புரைகள் யாவை என்பதையும்;

(iv) மணல் கொண்டு செல்வதற்கான சட்ட ரீதியான செயற்பாடுகள் யாவை என்பதையும்;

(v) மணல் அகழ்வின்போது இடம்பெறுகின்ற சுற்றாடல் பாதிப்புக்களைக் கண்காணிப்பதற்காகவும் கட்டுப்படுத்துவதற்குமாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யவையென்பதையும்;

(vi) மணல் அகழ்தல் தொடர்பாக புதிய சட்ட திட்டங்களைக் கொண்டு வருவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்?

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2020 மார்ச் 06, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

24/2020

கௌரவ புத்திக பத்திறண,— உள்ளக வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் பாவனையாளர் நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்ட கூட்டுறவு சங்கங்களின் அலுவலர்களில் ஒரு குழுவினர் வெளிநாட்டுக்கு சென்றுள்ளதாக போலி ஆவணங்களை சமர்ப்பித்து நிதி மோசடியில் ஈடுபட்டுள்ளார்கள் என்பதனையும்;

(ii) மேலும் பல மோசடிகள் மற்றும் நிதி முறைகேடுகள் இச்சங்கங்களில் இடம்பெறுகின்றன என்பதனையும்;

(iii) இக்காரணங்களால் கூட்டுறவு இயக்கம் தொடர்பான மக்களின் ஈர்ப்பு மற்றும் நம்பிக்கைக்கு பாதிப்பு ஏற்படுகின்றது என்பதனையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) கூட்டுறவு சங்கங்களில் இடம்பெறும் நிதி முறைகேடுகளை தடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதா என்பதனையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யவை என்பதனையும்;

(iii) (அ) (ii) இல் குறிப்பிட்ட அலுவலர்களுக்கு எதிராக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதனையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(இ) இன்றேல், ஏன்?

67/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊவா மாகாண சபையினால் பாடசாலை மாணவர்களுக்கு புத்தகப் பைகளைப் பெற்றுக்கொடுப்பதற்காக விலை மனுக்கள் கோரப்பட்ட இலக்கம் 100, கந்தன, ஸ்பிறிங்வலி எனும் முகவரியில் அமைந்துள்ள வீரசிங்க டிஸ்ரிபியுடர்ஸ் கம்பனி தொடர்பாக கணக்காய்வு விசாரணையின் 2.2.1 (அ) i, ii மற்றும் iii ஆகிய பந்திகளின் கீழ் காட்டப்பட்டுள்ள விடயங்களை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(ii) இது தொடர்பாக அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

144/2020

கௌரவ பிமல் ரத்நாயக்க,— மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொட்டகல, சிறிபெரகும் வித்தியாலயத்திற்கு அருகே அமைந்திருந்த கோழிப்பண்ணை, பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் ஆசிரியர்களின் எதிர்ப்புக் காரணமாக 2015 ஆம் ஆண்டு அகற்றப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) மேற்படி கோழிப் பண்ணைக்குப் பதிலாக, தற்போது பாரியளவிலான மாட்டுத் தொழுவமொன்றை ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதையும்;

(iii) மாட்டுத் தொழுவத்தை தாபிப்பதன் மூலம் அருகே அமைந்துள்ள சிறிபெரகும் வித்தியாலயத்தின் மாணவர்களின் சுகாதார நிலைமைகளுக்கு ஏற்படுகின்ற பாதிப்புக் காரணமாக பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் ஆசிரியர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்கள் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) மாட்டுத்தொழுவம் ஒன்றை நிர்மாணிப்பதன் காரணமாக மாணவர்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்பைக் கவனத்தில் கொண்டு இந்த மாட்டுத் தொழுவத்தை நிர்மாணிப்பதை நிறுத்தத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

147/2020

கௌரவ ஹேஷா விதானகே,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் செயற்பட்ட புரநெகும கருத்திட்டத்தின் கீழ் பதுளை மாவட்டத்தில் செயற்படும் நிர்மாணிக்கப்பட்டுள்ள பகல்நேர பராமரிப்பு நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) இவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) இவற்றிற்கென செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(iv) பதுளை மாவட்டத்தில் பகல்நேரப் பராமரிப்பு நிலையங்களின் தரத்தை உயர்த்துவதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

154/2020

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— மகாவலி, கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் நெல், மரக்கறி மற்றும் பழச்செய்கைகளை சேதப்படுத்துகின்ற பீடைகள் மற்றும் பங்கசு வகைகள் யாதென்பதையும்;

(ii) அப்பீடைகள் மற்றும் பங்கசு வகைகள் சேதப்படுத்துகின்ற பயிர் வகைகள் யாதென்பதையும்;

(iii) இறக்குமதி செய்யப்படுகின்ற பீடைகொல்லி வகைகள் மற்றும் அவை உற்பத்தி செய்யப்பட்ட நாடுகள் யாவையென்பதையும்;

(iv) விவசாய இரசாயனப் பயன்பாட்டின் காரணமாக பொதுமக்களின் சுகாதாரத்திற்குப் பாதிப்பு நிலைமை ஏற்படுகின்றதென்பதையும், அதனால் தொற்றா நோய் அதிகரிப்பதற்கான அச்சுறுத்தலொன்று நிலவுகின்றதென்பதையும் ஏற்றுக்கொள்கின்றாரா என்பதையும்;

(v) மேற்குறிப்பிடப்பட்ட பயிர்த் தொல்லைகளை தடுக்க மற்றும் கட்டுப்படுத்துவதற்காக உள்நாட்டு மற்றும் சுற்றாடல் நேயமிக்க முறைமைகள் அடையாளம் காணப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vi) ஆமெனில், அவை யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

25/2020

கௌரவ புத்திக பத்திறண,— மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2017 ஆம் ஆண்டிறுதியில் இலங்கையின் 60 வயதிற்கு மேற்பட்ட சனத்தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) அவ்வெண்ணிக்கை நாட்டின் மொத்த சனத்தொகையில் எத்தனை சதவீதமாகும் என்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட சனத்தொகையில், ஓய்வூதியம் அல்லது அரசாங்கத்தினால் வழங்கப்படும் யாதேனும் கொடுப்பனவொன்றை பெறும் வயோதிபர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்குறிப்பிட்ட சனத்தொகையில், அரசாங்கத்தினால் வழங்கப்படும் எவ்வித கொடுப்பனவையும் பெறாத வயோதிபர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) சிரேஷ்ட பிரசைகளின் நலன் கருதி வழங்கிய கொடுப்பனவை பெறுவதற்கு புதிய பயனாளிகளை சேர்த்துக்கொள்வதில்லை என்பதனை அவர் அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், புதிய பயனாளிகளை சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

68/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூகப் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 'சமுர்த்தி வீட்டுத் தோட்டச் செய்கை' நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனின், மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள் யாவை என்பதையும்;

(iii) இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பதுளை மாவட்டத்தில், ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ள வீட்டுத்தோட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி நிகழ்ச்சித்திட்டத்தை பதுளை மாவட்டத்தில் மேலும் விஸ்தரிப்பதற்கு அமைச்சு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

145/2020

கௌரவ பிமல் ரத்நாயக்க,— பிரதம அமைச்சர் மற்றும் புத்தசாசன, கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருணாகல் மாவட்டத்தின் பன்னல பிரதேச செயலகப் பிரிவில், 1605 ஆம் இலக்க தம்பகந்த கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த, ஹிபுடாவ கிராமத்தின், 03 ஆம் இலக்க கோவில்கந்த என்ற தனியார் காணியில் தொல்லியல் பெறுமதிமிக்க இடிபாடுகள் பெருமளவில் பரவிக் காணப்படுகின்றதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) 2014.06.11 ஆம் திகதியன்று இவ்விடயம் தொடர்பாக தொல்லியல் ஆணையாளர் நாயகத்தினால் அமைச்சு செயலாளர் ஊடாக அப்போதைய பாராளுமன்ற ஆலோசனைக் குழுவிற்கு பதில் அனுப்பப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) 2014.05.27 ஆம் திகதியன்று தொல்லியல் அதிகாரிகள் சிலர் வருகைதந்து மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வின் பிரகாரம், சுமார் ஐந்து ஏக்கர் காணியில் தொல்லியல் இடிபாடுகளாக தூபிக் கட்டடமொன்றும், இரண்டு கட்டட இடிபாடுகளும், தூண் பாதக் கற்களும், பண்டைய செங்கல் ஒடுகளும் களிமண் பாத்திரத் துண்டுகளும் பரவி உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இக் காணியை எல்லைக் கற்கள் இட்டு பாதுகாப்பு கருதி ஒதுக்குவதற்கும், அந்த இடத்தை பாதுகாக்கப்பட்ட நினைவிடமாக வர்த்தமானியில் வெளியிடுவதற்காக பதிவு செய்வதற்கும், 2014 ஆம் ஆண்டிலேயே நடவடிக்கை எடுப்பதாக அறிவித்து சுமார் 05 ஆண்டுகளுக்கு கிட்டிய காலம் கடந்துள்ள போதிலும், இற்றைவரை அதனை நடைமுறைப்படுத்தாமைக்கான காரணங்கள் யாவை என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

148/2020

கௌரவ ஹேஷா விதானகே,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இரத்தினபுரி மாவட்டத்தில், வெலிகெபொல பிரதேச செயலாளர் பிரிவில், அம்பேவில சந்தியிலிருந்து ரங்வல ஊடாக செல்கின்ற உடவெல வீதியானது பல வருட காலமாக திருத்தப்படாமையின் காரணமாக கடுமையாகச் சேதமடைந்துள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வீதி உரித்தாகும் நிறுவனம் யாது;

(ii) மேற்படி வீதியை போக்குவரத்துக்கு உகந்த வகையில் திருத்தியமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில், திருத்தியமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி மற்றும் பூர்த்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திகதி யாது;

(iv) மேற்படி வீதியை அபிவிருத்தி செய்வதற்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ள நிதித்தொகை யாது;

(v) தற்போது மேற்படி நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

155/2020

கௌரவ ஆனந்த அலுத்கமகே,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016. 02. 23 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரத்தின் மூலம் தாபிக்கப்பட்ட தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் நோக்கங்கள் யாவையென்பதையும்;

(ii) குறித்த ஆணைக்குழுவானது செயற்பட்ட திகதி மற்றும் காலப்பகுதி யாதென்பதையும்;

(iii) அதன் தலைவராகப் பணியாற்றிய நபரின் பெயர், சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் யாதென்பதையும்;

(iv) அவ்வாணைக்குழுவின் அங்கத்தவர்களது பெயர்கள், சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகள் யாதென்பதையும்;

(v) இது வரையில் குறித்த ஆணைக்குழுவினால் அடையப்பெற்ற இலக்குகளும் மற்றும் நோக்கங்களும் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா. 1/2020

கௌரவ புத்திக பத்திறண,— மன்னன் இராவணன் தொடர்பாக முறைசார்ந்த ஆய்வொன்றை மேற்கொள்ளல்,— மன்னன் இராவணன் தொடர்பாக உறுதியான வரலாற்றுச் சான்றுகள் இல்லாத போதிலும், முறைசார்ந்த ஆய்வொன்றின் மூலம் அவர் தொடர்பாக நாட்டு மக்களின் மனப்பாங்கினை மேம்படுத்துவதற்கும் மன்னன் இராவணனுக்கு இருந்த அறிவினை நாட்டின் அபிவிருத்திக்கு பயன்படுத்துவதற்கும், இலங்கை வரலாற்றில் மறைந்துபோயுள்ள அத்தியாயமொன்றை வெளிக்கொண்டு வருவதற்கும் இயலுமாயுள்ளதால் புத்திஜீவிகள் குழுவொன்றின் மூலம் மன்னன் இராவணன் தொடர்பான ஆய்வொன்று மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 2/2020

கௌரவ புத்திக பத்திறண,— இலங்கைக்குத் தேவையான சீனியை நாட்டினுள்ளேயே உற்பத்தி செய்தல்,— சீனியை உற்பத்தி செய்வதற்குத் தேவையான வளங்களை இலங்கை தன்னகத்தே கொண்டிருப்பதால், சிறந்த முகாமைத்துவத்துடன், வினைத்திறனாகவும் திட்டமிட்ட வகையிலும் செயலாற்றி நாட்டுக்குத் தேவையான சீனியை உற்பத்தி செய்வதற்கும் சீனியை சுத்திகரிப்பதற்கும் தேவையான தொழிற்சாலைகளை அரசாங்கம் தாபித்து சீனிக் கைத்தொழிற் துறையை பாதுகாத்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 3/2020

கௌரவ புத்திக பத்திறண,— பாடசாலைப் பிள்ளைகளின் முக்கியத்துவத்தை சமூகமயமாக்கல்,— பெற்றோர், ஆசிரியர்கள், விளையாட்டு பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் பாடசாலை வான் சாரதிகளுக்கு பிள்ளைகளின் முக்கியத்துவம் பற்றி சமூகவியல் மற்றும் உளவியல் முறையியல்களைக் கொண்டு எளிதாக விளக்கி, நாட்டினதும் சமூகத்தினதும் எதிர்கால நல்லிருப்புக்காக பிள்ளைகளை சமூக சவால்களிலிருந்து எவ்வாறு பாதுகாப்பது என்பதைப் பற்றிய கலந்துரையாடலொன்றை நடத்துவதற்காக தேசிய மட்டத்திலான நிகழ்ச்சித்திட்டமொன்றை திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் தலையீடு செய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 4/2020

கௌரவ புத்திக பத்திறண,— புலமை சார்ந்த வறுமையை ஒழித்தல்,— பௌதீக வர்த்தகப் பொருட்கள் புழங்கும் வேகத்திற்கு நிகராக அறிவு, புலமை மற்றும் மானிட ஒழுக்க விழுமியங்கள் மக்களை சென்றடையாமை காரணமாக அறியாமை தலைதூக்கியுள்ளதன் மூலம், புலமைசார்ந்த வறுமை எமது நாட்டில் காணப்படும் பிரதான பிரச்சினையாக இருந்த போதிலும் அது தொடர்பாக நாட்டினுள் குறைந்தளவு கவனமே செலுத்தப்படுவதனால் நாட்டு மக்களின் புலமைசார்ந்த வறுமையை இல்லாமல் செய்வதற்காக, சகல வயதுப் பிரிவினரும், உள்ளடங்குகின்ற வகையில் முறைசார்ந்த விதத்தில் திட்டமிடப்பட்ட தேசிய நிகழ்ச்சித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 7/2020

கௌரவ புத்திக பத்திரண,— பாராளுமன்ற கற்கை நிலையமொன்றை ஆரம்பித்தல்,— இலங்கை மற்றும் பல்வேறுபட்ட நாடுகளின் பாராளுமன்ற நடைமுறைகள், பாராளுமன்ற வரலாறு மற்றும் அரசியல் முறையியல்கள் குறித்து பாடசாலை மாணவர்கள், இளைஞர் யுவதிகள் மற்றும் ஏனைய கல்விபெறுவோர்களுக்கு கற்பதற்கான வசதிகளை வழங்கக்கூடிய வகையிலான பாராளுமன்றக் கற்கை நிலையமொன்று பாராளுமன்றத்தினுள் தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 8/2020

கௌரவ புத்திக பத்திரண,— இலங்கையிலுள்ள பிள்ளைகளின் சுகாதாரத்திற்கு ஊடகங்கள் மூலமாக இடம்பெறுகின்ற அழுத்தங்களைக் குறைத்தல்,— அதிகமாக குளுக்கோஸ், கொழுப்பு மற்றும் உப்பு அடங்கிய உணவு வகைகளை உட்கொள்வதால் நாட்டிலுள்ள பிள்ளைகள் மத்தியில் உடற்பருமன், இருதய நோய்கள், உயர் இரத்த அழுத்தம் போன்ற தொற்றா நோய்கள் பரவி வருகின்ற அதேவேளை இத்தகைய பாதகமான உணவு வகைகள் தொடர்பில் பிள்ளைகளைத் தூண்டும் விதமாக ஊடகங்கள் மூலமாக பிள்ளைகளை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்ற வர்த்தக விளம்பரங்கள் அதற்கான பிரதான காரணமாக அமைவதால் சிறுவர் உணவு தொடர்பில் மேற்கொள்ளப்படுகின்ற வர்த்தக விளம்பரங்களை ஒழுங்குபடுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 9/2020

கௌரவ புத்திக பத்திறண,— சிக்கலான உலகளாவிய சந்தையின் காரணமாக மக்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளைக் குறைத்தல்,— உலகமயமாக்கலின் மூலம் அறிமுகம் செய்யப்பட்ட உலக வர்த்தக முறைகள் மனிதனின் மனதை ஆக்கிரமித்துள்ளதன் காரணமாக அவன் பரம்பரை பரம்பரையாகக் கொண்டு வந்த ஒழுக்க விழுமியங்களும் வளர்ச்சியடைந்த தத்துவக் கருத்துக்களும் மனித மனங்களிலிருந்து பறித்தெடுக்கப்படுதல் தற்காலத்தில் இலங்கையர்களுக்கும் பொதுவானதென்பதால், சந்தைப் பொருளாதாரத்தினுள் கட்டியெழுப்பப்படுகின்ற சிக்கலான வாழ்க்கை முறையையும் அதனைத் தொடர்ந்து எழுகின்ற சிக்கலான சமூகப் பிரச்சினைகளையும் தீர்த்துக்கொண்டு அமைதியான வாழ்க்கை முறையொன்றை நோக்கிச் செல்வது எவ்வாறு என்பது பற்றி மக்களை அறிவூட்டுவதற்குரிய வேலைத்திட்டமொன்றும் அறிவார்ந்த கருத்தாடலொன்றும் நாட்டினுள் நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 10/2020

கௌரவ புத்திக பத்திறண,— சுற்றாடலைப் பாதுகாப்பதன் மூலம் ஆரோக்கியமான நாடொன்றைக் கட்டியெழுப்புதல்,— இன்று இலங்கையில் சுற்றாடல் மாசடைதல் அதிகரித்துள்ளமையால் நீர் மற்றும் உணவுகளில் கதிரியக்கத் தன்மை அதிகரித்துள்ளதோடு, எதிர்காலத்தில் மனிதனுக்குப் பீடிக்கின்ற ஒருசில நோய்களின் நோய்க் காரணிகளைக்கூட கண்டுபிடிப்பது சிரமமானதாக அமையலாம் என்பதால், இது தொடர்பாக மேலும் ஆய்வு செய்வதற்காக கல்விமான்கள் குழுவொன்றை நியமித்து அறிக்கையொன்றைப் பெற்று, அதன் விதப்புரைகளை அமுலாக்குவதன் ஊடாக நாட்டிலுள்ள மக்களின் ஆரோக்கியம் உறுதிசெய்யப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.11/2020

கௌரவ புத்திக பத்திறண,— நாட்டின் பாதுகாப்புக்கு கமத்தொழிலைப் பேணுதல்,— முதலாளித்துவத்தின் மூன்றாவது கட்டமாகிய இரண்டாவது உலக மகா யுத்தத்துக்கு பிற்பட்ட காலத்தில் கமத்தொழில் வாழ்க்கை முறையானது பசுமைப் புரட்சியுடன் முழுமையாகவே மாற்றமடைந்த காரணத்தினால் தற்போதைய உலகளாவிய சமூகம் எதிர்கொண்டுள்ள சுற்றாடல் மாசடைதல், ஆரோக்கியத்தை இழத்தல் மற்றும் தூய்மையான உணவு காணப்படாமை, ஆகிய இடர்காண் நிலைமைகளிலிருந்து இலங்கையைப் பாதுகாத்துக் கொள்வதற்காக மக்களை நிலைபேறான கமத்தொழில் பிரயோகங்களுக்கு ஊக்குவிப்பதன் மூலமும் விவசாயிகளைப் பாதுகாக்கும் அரச கொள்கைகளை நாட்டினுள் தாபிப்பதன் மூலமும் நாட்டின் எதிர்காலம் பேணப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 12/2020

கௌரவ புத்திக பத்திறண,— தாய், சேய் போஷாக்கின்மையை ஒழித்தல்,— இலங்கையில் எடைகுறைந்த மகப்பேற்று வீதம் 25% எனும் உயர் பெறுமானத்தை கொண்டுள்ளதோடு, அதற்கான பிரதான காரணியாக அமைவது ஊட்டச்சத்துமிக்க உணவுப் பற்றாக்குறையே என்பதால், தாய், சேய் போஷாக்கின்மையை ஒழிப்பதற்குத் தேவையான ஊட்டச்சத்துமிக்க உணவுகளை வறியோர்களுக்கு வழங்குவதை முதன்மையாகக்கொண்ட வேலைத்திட்டம் ஒன்று அமுலாக்கப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 13/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— கிராமியப் பிரதேசங்களில் பௌத்த விஹாரைகளில் தங்கியிருக்கும் வயோதிப பிக்குமார்களைப் பாதுகாப்பதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை அமைத்தல்,— இலங்கையின் அநேகமான கிராமியப் பிரதேசங்களில் பௌத்த விஹாரைகள் மிகக் குறைந்த பொருளாதார நிலையிலுள்ளதால், அத்தகைய விஹாரைகளில் தங்கியிருக்கும் வயோதிப பிக்குமார்களைப் பாதுகாப்பதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 14/2020

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிராந்திய ஊடகவியலாளர்களின் தொழில்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பொறிமுறை ஒன்றைத் தாபித்தல்,— ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு தகவல்கள் முக்கிய காரணிகளாக இருப்பதுடன் இவ்வாறான தகவல்களை அளிப்பதில் முக்கிய பங்காற்றி வரும் பிராந்திய ஊடகவியலாளர்களின் தொழில் ரீதியான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பொறிமுறை ஒன்றை தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 15/2020

கௌரவ ஹேஷா விதானகே,— உமா ஓயா அபிவிருத்தி கருத்திட்டத்தின் விளைவாக பண்டாரவளை, லியன்கஹவெல பிரதேசத்தில் வீடுகள், காணிகள் உள்ளிட்ட சொத்துக்களை இழந்துள்ள குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குதல்,— உமா ஓயா உள்ளிட்ட அபிவிருத்தி கருத்திட்டத்திற்காக நிலக்கீழ் சுரங்கங்கள் அகழப்படுவதால் பண்டாவளை, லியன்கஹவெல பிரதேசத்திலுள்ள மக்கள் தங்களது வீடுகள், காணிகள் உள்ளிட்ட சொத்துக்களை இழந்து தற்போது மூன்று வருட காலம் கடந்துள்ள நிலையில், இடம்பெயர்ந்துள்ள இம்மக்களுக்கு இற்றைவரை எவ்வித இழப்பீட்டுத் தொகையோ அல்லது வேறு நிவாரணமோ கிடைக்கவில்லை என்பதால் இம்மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாாளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 16/2020

கௌரவ ஹேஷா விதானகே,— புகையிரதம் மூலம் காய்கறிகளை எடுத்துச்செல்வதற்கான திட்டமொன்றை ஆரம்பித்தல்,— பதுளை மாவட்டம் உள்ளிட்ட காய்கறி உற்பத்தி செய்யப்படும் மாவட்டங்களிலிருந்து காய்கறி உற்பத்தியாளர்களின் உற்பத்திகளை குறைந்த செலவிலும் விரயத்தினை இயன்றளவு குறைக்கும் வகையிலும் புகையிரதம் மூலமாக நாட்டின் ஏனைய பிரதேசங்களுக்கு எடுத்து செல்வதற்கான திட்டமொன்றை ஆரம்பிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 17/2020

கௌரவ ஹேஷா விதானகே,— உமா ஓயா அபிவிருத்தித்திட்டம் காரணமாக நீர்த் தட்டுப்பாட்டை எதிர்நோக்கியுள்ள மக்களுக்கு வசதிகளைச் செய்து கொடுத்தல்,— உமா ஓயா அபிவிருத்தித்திட்டம் காரணமாக தற்போது ஏழு பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள 8394 குடும்பங்கள் நீர்ப் பற்றாக்குறையை எதிர்நோக்கியுள்ளதனால் அந்த மக்களுக்கான நீர் வசதியை வழங்குவதற்காக துரித வேலைத்திட்டமொன்றை நடமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 18/2020

கௌரவ ஹேஷா விதானகே,— இரத்தினபுரி மாவட்டத்தில் வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்தல்,— பாதகமான காலநிலை காரணமாக தொடர்ச்சியாக வெள்ளப் பெருக்கினால் அனர்த்தத்துக்கு உட்படும் இரத்தினபுரி மாவட்டத்தின் வெள்ளப்பெருக்கை கட்டுப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்றை தயார் செய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 19/2020

கௌரவ ஹேஷா விதானகே,— எதிர்கால சந்ததியினருக்காக சப்ரகமுவாவுக்குத் தனித்துவமான மரபுரிமைகளைப் பாதுகாத்தல்,— கலை, விளையாட்டு போன்ற பல்வேறு துறைகளில் சப்ரகமுவாவுக்கு உரித்தான தனித்துவமிக்க பண்புகள் காணப்படுவதுடன், இன்று வர்த்தகமயமாக்கல் காரணமாக மேற்படி தனித்துவமிக்க பண்புகள் அழிவடைகின்ற அச்சுறுத்தல் காணப்படுவதனால் எதிர்கால சந்ததியினருக்காக சப்ரகமுவாவுக்கு தனித்துவமிக்க மரபுரிமைகளை பாதுகாக்கும் நிகழ்ச்சித்திட்டமொன்றை தயார் செய்ய வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 20/2020

கௌரவ ஹேஷா விதானகே,— இரத்தினபுரி மாவட்டத்தில் இயற்கை அனர்த்தங்களை குறைக்கும் நிகழ்ச்சித்திட்டமொன்றைத் தயார் செய்தல்,— தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கைகளுக்கு அமைய இரத்தினபுரி மாவட்டத்தில் இயற்கை அனர்த்தங்களுக்கு உட்படுகின்ற அச்சுறுத்தலைக் கொண்ட பல இடங்கள் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளதனால் மேற்படி நிலைமைகளை குறைப்பதற்காக ஏதேனுமொரு நிகழ்ச்சித்திட்டத்தை தயார் செய்ய வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 21/2020

கௌரவ ரவி கருணாநாயக்க, — அரசியல்வாதிகள் விரும்பத் தகாததும் ஆத்திரமூட்டுவதுமான கூற்றுகளினால், ஏளனமான குறிப்புகளை மேற்கொண்டு, மத ரீதியான பதற்றத்தை உருவாக்குவதைத் தவிர்த்தல்,— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 10 ஆவது உறுப்புரையில் பொதிந்துள்ளவாறாக (சிந்தனை செய்யும் சுதந்திரம், மனசாட்சியைப் பின்பற்றும் சுதந்திரம், மதச்சுதந்திரம்) அரசியலமைப்பை பாதுகாப்பதற்கும் நிலை நிறுத்துவதற்கும் உறுதிமொழி செய்துகொண்ட எந்த அரசியல்வாதியும் ஏளனமாக குறிப்புகளை வெளிப்படையாகச் செய்தல் அல்லது விரும்பத்தகாததும் ஆத்திரமூட்டுவதுமான கூற்றுகள், வெறுப்புப் பேச்சு, மதப் பதற்றத்தை ஏற்படுத்தும் வகையில் இலங்கையிலுள்ள ஏதும் மதத்தினை கேவலப்படுத்தல் அல்லது கண்டித்தல் என்பவற்றை வெளிப்படையாகச் செய்ய முடியாது என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.